# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 06.11.2017 | 1) தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதி களில் நல்ல தண்ணீரில் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களை அழிக்க பயன்படுத்தப்படும் Abate என்கிற Temephos மருந்து 60 வார்டுகளிலும் DBC பணியாளர்களைக் கொண்டு தெளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி மருந்து மிகக் குறைந்த அளவு இருப்பு உள்ளதாலும், தற்போது டெங்கு காய்ச்சல் அதிகமாக பரவி வருவதாலும் கொசுப்புழுக்களை ஒழிக்கக்கூடிய Abate என்கிற Temephos மருந்தினை கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் நிறுவனத்தின் அனுமதி பெற்று M/s. Heranba Industries Limited நிறுவனத்தின் மூலம் லிட்டர் ரூ 569.32 வீதம் 1000லிட்டர் வாங்குவதற்கு அனுமதியும் மற்றும் அதற்காகும் செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/7958/13 | 96) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 2) தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் நடைபெறும் நான்கு மற்றும் இரண்டு சக்கர வாகன மேளா மற்றும் இதர மேளாக்கள் நடத்துவதற்கான தொகை 1 ச.மீட்டருக்கு ரூ 650/– என நிர்ணயம் செய்யவும், மேலும் கால நீட்டிப்பு செய்யும்பட்சத்தில் அதே தொகையை வசூல் செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எப்1/21218/05 | 97) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 3)தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் தற்போது டெங்கு காய்ச்சல் அதிகமாக பரவி வருவதால், கொசுப்புழுக்களை அழிக்க பயன்படுத்தப்படும் Malathion Technical Grade 95% என்கிற மருந்தினை கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் நிறுவனத்தின் அனுமதி பெற்ற M/s. Shivalik Rasayan Limited நிறுவனத்தின் மூலம் ஒரு லிட்டர் ரூ. 375/– வீதம் 1000லிட்டர் வாங்குவதற்கு அனுமதியும் மற்றும் அதற்காகும் செலவுத்தொகையினை பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 98) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>அலுவலகக் குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/7958/13</td><td></td></tr>
<tr><td></td><td>4)தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் பொது சுகாதாரம் மலேரியா பிரிவின் மூலம் கொசுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு 3 புகை அடிக்கும் இயந்திரம் (Vehicle Fogging Machine) மூலம் கொசுப்புகை மருந்து அடிக்கப்பட்டு வருகிறது. தற்போது டெங்கு காய்ச்சல் அதிக அளவில் பரவி வருவதால் மேலும் கூடுதலாக 1 புகை அடிக்கும் இயந்திரம் ( Vehicle Fogging Machine) வாங்குவதற்கு அனுமதியும் மற்றும் அதற்காகும் செலவுத்தொகை ரூ. 6,38,000/–னை பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/3315/14</td><td>99) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>5) தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் சேகரமாகும் குப்பைகளில், மறு சுழற்சி குப்பைகளை சீர் செய்யும் நடவடிக்கையாக பொது மக்களிடத்திலும் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில் அவர்கள் அதனை அறிந்துகொள்ளும் வகையில் மாநகராட்சி எல்கைக்குட்பட்ட தெற்கு பீச் ரோட்டில் அமைந்துள்ள ரோச் பூங்கா வளாகத்தில் Automobile Scrap களை கொண்டு Green Frag, Sailing Boat, Sea Horse, Blue Wheta, fish, Crocodile,Tortoise, Brawn, Crap. Dolphin Peart, Mermaid, Sangue, Octobus, Shark போன்ற கடல்வாழ் உயிரினங்களை சிற்பமாக வடிவமைத்து கண்காட்சிப்படுத்தும் பணியினை 15 எண்ணம் ஆந்திர மாநில கைவினைஞர்களை கொண்டு, மேற்கண்ட சிற்பங்களை வடிவமைக்கும் பணியினை மேற்கொண்ட விலைப்புள்ளியை மாமன்றம் அங்கீகரிக்கலாம், மேலும் அதற்கான செலவினத்தொகை ரூ 547000/– செலவில் மேற்கொண்டதை மாநகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியை அங்கீகரிக்க மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>அ) விலைப்புள்ளி மாமன்றம் அங்கீகரிக்கலாம்<br>ஆ) செலவினத்தை மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/4336/2017</td><td>100) அலுவலகக் குறிப்பு அ அங்கீகரிக் கப்பட்டது, அலுவலகக் குறிப்பு ஆஅங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
<tr><td></td><td>6) தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட இரண்டு இனங்கள் மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் 01.04.2015 முதல் 31.03.2018 வரை உள்ள காலங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டிருந்தது. கீழ்க்கண்ட இனங்களின் உரிமம் காலம் 31.03.2018உடன் நிறைவு பெறுகிறது.
<table>
<tr><th>வரிசை எண்</th><th>உரிமம் இனம்</th></tr>
<tr><td>1</td><td>கீழரதவீதி மாநகராட்சி திருமண மண்டபத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்</td></tr>
<tr><td>2</td><td>சேதுபாதை ரோட்டில் மாநகராட்சிக்கு சொந்தமான</td></tr>
</table></td><td>101) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | (nested row) \| இடத்தில் உள்ள பனைமரங்களின் மகசூல் அனுபவிக்கும் உரிமம்<br>மேற்கண்ட உரிமங்களை மீண்டும் 01.04.2018 முதல் 31.03.2021 வரை உள்ள காலங்களுக்கு மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், இவ்வகைக்கு ஏற்படும் விளம்பர செலவினங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.அ16/4384/2017 | |
| | 7) இம்மாநகராட்சி பகுதியில் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி 2015–2016ஆம் ஆண்டுக்கு வேதியியல் செரிவூட்டு சமுதாயகூட கழிப்பறையுடன் சமையலறை (Installation of bio digester unit in Community toilet with Community kitchen) நிறுவுதல் சம்பந்தமான ரூ 25.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள, உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி 3025–2016 ஆம் ஆண்டுக்கான பொதுக்குழு கூட்ட நடவடிக்கை நாள் 15.10.2015இல் ரூ 20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.<br>எனவே இம்மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண். 35 பாளைரோடு மேற்கு மில்லர்புரம் சிலோன் காலனி குடிசை மாற்று வாரியகுடியிருப்பு பகுதியில் வேதியியல் செரிவூட்டு சமுதாயகூட கழிப்பறையுடன் சமையலறை (Installation of o digester unit Community toilet with community kitchen) நிறுவுதல் சம்பந்தமாக ரூ. 25.90 லட்சம் செலவில் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டில் வேதியியல் செரிவூட்டு சமுதாயகூட கழிப்பறையுடன் சமையலறை நிறுவும் பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும் மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ 25.00 லட்சத்தில், உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி 2015–2016ஆம் ஆண்டு நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ 20.00 லட்சம் போக கூடுதல் தொகை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/2931/2015 | 102/ அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| | 8) தூத்துக்குடியில் 22.11.2017 அன்று நடைபெறும் முன்னாள் முதல்வர் பாரத ரத்னா டாக்டர்.எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம் தொடர்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை தரவுள்ளதாலும், மேற்படி விழாவில் சுமார் 20000க்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டு அவர்களுக்கு நலத்திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்படவுள்ளது. இம்மாநகராட்சி வார்டு எண். 34 பகுதிக்குட்பட்ட மடத்தூர் ரோடு முதல் விழா நடைபெறும் இடமான (சோரிஸ்புரம்) நியூ சுந்தர் நகர் வரை 1300 மீட்டர் தூரத்திற்கான தார்சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. | 103) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | முாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி அவர்களின் கடிதம் எண். ஜி1/27874/2017 நாள் 03.11.2017ல் மேற்படி சாலையினை உடனடியாக சீரமைத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சாலையானது தூத்துக்குடி புறவழிச்சாலையில் இருந்து திருநெல்வேலி பிரதான சாலையினை பொதுமக்கள் போக்குவரத்து சிரமமின்றி அடைவதற்கும், பொதுமக்கள் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரக பெருவளாகத்திற்கு தூத்துக்குடி மதுரை புறவழிச்சாலையில் இருந்து குறைவான நேரத்தில் வருவதற்கும் மேற்படி சாலையினை அமைப்பது இன்றியமையாததாகும். ஏனவே அந்த சாலையை செப்பனிடும் பணிக்காக ரூ. 119.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>எனவே மேற்படி பணியினை மத்திய நிதிக்குழு மான்யத்தில் இருந்து நிதி செலவு செய்திட நிர்வாக அனுமதி பெறுவதற்காக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/4471–1/2017 | |

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்: 06.11.2017